செ.வெ.எண்:39 நாள்:29.6.2015

**சிறுபான்மையின மாணவ/மாணவியர்களுக்கு 2015-16ஆம் ஆண்டிற்கு தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான (Merit Cum Means Based Scholarship) கல்வி உதவித்தொகை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

தமிழ்நாட்டில் வாழும் மதவழி சிறுபான்மையினரான கிறித்துவர் இஸ்லாமியர், சீக்கியர். புத்தமதத்தினர், பார்சி மற்றும் ஜெயின் பிரிவை சார்ந்த தொழில் மற்றும் தொழில்நுட்ப கல்வி பயிலும் மாணவ/மாணவியர்கள் தகுதி மற்றும் வருவாய் அப்படையிலான கல்வி உதவித்தொகை திட்டத்தின்கீழ் 2015-16ஆம் ஆண்டிற்கு கல்வி உதவித்தொகை பெறுவதற்கு புதிய இணையதள முகவரியான www.scholarships.gov.in என்பதில் ஆன்லைன் மூலம் விண்ணப்பிப்பதற்கான காலவரையரை, புதியதற்கு 30.09.2015 மற்றும் புதுப்பித்தலுக்கு 15.11.2015 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு 2279 மாணவர்களுக்கு புதிய கல்வி உதவித்தொகை மைய அரசால் 2015-16ம் ஆண்டிற்கு இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கல்வி உதவித்தொகை பெற தேவையான தகுதிகள் பின்வருமாறு-

1. மாணவ /மாணவிகள் கடந்த ஆண்டு பொது தேர்வில் குறைந்த பட்சம் 50 சதவீதம் மதிப்பெண் பெற்றிருத்தல் வேண்டும்.

2. பெற்றோர் /பாதுகாவலர் ஆண்டு வருமானம் அனைத்து வகையிலும் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

www.scholarships.gov.in என்ற புதிய இணையதள முகவரியில் Online மூலம் விண்ணப்பித்து இணைப்புகளை அப்லோடு (upload) செய்து மாணவ/மாணவியர்கள் பதிவு செய்யப்பட்ட அவ்விண்ணப்பத்தை படியிறக்கம் செய்து கையொப்பமிட்டு, அத்துடன் மதிப்பெண் சான்றிதழ், மதத்திற்கான சான்று, வருவாய்த்துறையிடமிருந்து பெற்ற வருமான சான்றிதழ் ஆகியவற்றின் நகலுடன் கல்விக்கட்டணம் செலுத்திய ரசீது, இருப்பிட முகவரி, வங்கி கணக்கு எண் (Core Bank Service Account Number, IFS Code) ஆகிய விவரங்களுக்கான ஆவணங்களை இணைத்து அவர்கள் பயிலும் கல்வி நிலையங்களில் 30.09.2015-க்குள் புதியதிற்கும் 15.11.2015-க்குள் புதுப்பித்தலுக்கும் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒப்பளிக்கப்பட்ட கல்வி உதவித்தொகை மாணவ/மாணவியர்களின் வங்கி கணக்குகளில் நேரடியாக செலுத்தப்படவுள்ளதால் கல்வி உதவித்தொகை பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது சரியான வங்கி கணக்கு விவரங்களையும் தவறாது சமர்ப்பிக்க வேண்டும். மத்திய அரசால் தெரிவு செய்யப்பட்ட கல்வி நிலையங்களில் (Listed Institutions) பயிலும் மாணவ/மாணவியர் செலுத்தும் முழுக் கல்வி கட்டணங்களும் (திரும்ப பெறும் கட்டணங்களை தவிர்த்து) மீள வழங்கப்படும். ஏனைய கல்வி நிறுவனங்களில் விடுதியில் தங்கி பயில்பவருக்கு ரூ.30000/- மற்றும் விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ.25,000/-வரை அதிகபட்சமாக கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

கல்வி நிலையங்கள் மேற்படி ஆன்லைன் மூலம் மாணவ/மாணவியா்களால் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை அவ்வப்போது பரிசீலித்து தகுதிபெற்ற விண்ணப்பங்களை ஆன்லைன் மூலம் 20.10.2015-க்குள் புதியதிற்கும் 25.11.2015-க்குள் புதுப்பித்தலுக்கும் அனுப்புதல் வேண்டும்.

திருவாரூா் மாவட்டத்தில் கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவ மாணவியா்கள் மேற்படி கல்வி உதவித்தொகை பெற உரிய காலத்தில் ஆன்லைன் மூலம் விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவா் முனைவா் மா.மதிவாணன்.இ.ஆ.ப., அவா்கள் தெரிவித்துள்ளாா்.

**வெளியீடு:செய்தி மக்கள் தொடா்பு அலுவலா் திருவாரூா்**